Sl. No. of Q.P. : 7510

E-I

| | | |
|---|---|---|
| Name of the Paper | : | Skills of Language Use and Social History of Tamil |
| Name of the Course | : | B.A. (PROG) I Year- Paper-I: Tamil-A |
| Semester/Annual | : | Annual Mode |
| Duration | : | 3 Hours |
| Maximum Marks | : | 100 |

1. கட்டுரையின் வகைகளை விளக்குக. (20)

(அல்லது)

"இந்தியாவில் வேலையில்லா திண்டாட்டம்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

2. கடிதத்தின் வகைகளையும் அமைப்புமுறையையும் விளக்கி எழுதுக. (15)

(அல்லது)

கல்லூரிக் கட்டணம் செலுத்தப் பணம் வேண்டி உம் தந்தைக்கு கடிதம் ஒன்று எழுதுக.

3. பின்வரும் பத்தியைப் படித்து, தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு விடையளிக்க. (15)

கம்பன் பிறந்த தமிழ்நாடு என்று பாரதியாரால் பாராட்டப்பட்டவர் கம்பர். மாயூரத்திற்கு அருகே ஒரு சிற்றூரில் காளிபூசை செய்யும் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த அவர் உலகத்துச் சிறந்த கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். கம்பங்கொல்லையைக் காவல்புரிந்த காரணத்தால் கம்பர் என்ற பெயர் பெற்றதாகக் கூறுவர். காளி கோயில் கம்பத்தின் அருகே கண்டெடுக்கப்பட்டதால் அந்தப் பெயர் வந்தது என்றும் கூறுவர். காஞ்சி நகரத்து ஏகம்பனை வழிபடும் குடும்பத்தில் பிறந்ததனால் அப்பெயர் அமைந்தது என்று கூறுவோரும் உண்டு. அவரை இளமையில் ஆதரித்து வளர்த்த வள்ளல் சடையப்பரை என்றும் மறவாமல் போற்றினார் கம்பர். அவர் தாம் இயற்றிய இராமாயணத்துள் ஆயிரம் பாட்டுக்கு ஒரு முறை சடையப்பரைப் புகழ்ந்து பாடியுள்ளார். இராமன் இராவணைனை வென்று நாட்டிற்குத் திரும்பி முடிசூட்டிக் கொண்ட விழாவை வருணித்த கம்பர் சடையப்பரின் மரபினராகிய உழவர் குடும்பத்தார் முடியை எடுத்துக் கொடுக்க வசிட்டன் வாங்கிச் சூட்டினார் என்று புகழ்ந்துள்ளார். இவ்வாறு அவர் தம் நன்றியறிதலைப் புலப்படுத்தியுள்ளார்.

கேள்விகள்

அ) கம்பன் பிறந்த தமிழ்நாடு என பாராட்டிய கவிஞர் யார்?

ஆ) கம்பர் என்ற பெயருக்கான காரணங்களை எழுதுக.

இ) கம்பர் இயற்றிய காப்பியத்தின் பெயரென்ன?

ஈ) கம்பரை அதரித்த வள்ளல் யார்?

உ) கம்பரின் நன்றியறிதல் எவ்வாறு புலப்படுகிறது?

4. அடுக்குத் தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

(அல்லது) (5)

வளமைத் தொடருக்கும் மரபுத் தொடருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

5.கீழ்க்காணும் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக. (5)

அ) சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல

ஆ) மட்டம் தட்டுதல்

6. கலைச்சொல்லாக்கத்தின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விதிமுறைகள் யாவை? (5)

(அல்லது)

கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

அ) Draft ஆ) Language இ) Receipt ஈ) Cash உ) Translation

7. எவையேனும் இரு தலைப்புகளில் கட்டுரை எழுதுக. (12.5 X 2 = 25)

அ) தமிழர் பண்பாடு

ஆ) கடல் கடந்த தமிழர் நாகரிகம்

இ) பிற நாடுகளில் தமிழ் மொழிச் செல்வாக்கு

8. எவையேனும் இரண்டு பற்றி சிறுகுறிப்பு வரைக. (5 X 2 = 10)

அ) கோயிற்கலை

ஆ) சமய வாழ்வு

இ) இலங்கையில் தமிழ்